<u>மாவட்ட உரிமையியல் நீதிமன்றம், மேட்டூர்.</u>

<u>அ.வ.எண். 49/2022</u>

| | | | |
|---|---|---|---|
| பெயர் | வேலு | தொழில் | |
| தகப்பனார் பெயர் | முத்துக்கவுண்டர் | வகுப்பு | |
| வயது | | சமயம் | இந்து |
| நாள் | 03.12.2024 | கிராமம் | |
| சாட்சி | வா.சா.1 | | |

இன்று 03.12.2024 ஆம் தேதியன்று சாட்சி இந்நீதிமன்றம் வரவழைக்கப்பட்டு சத்தியப் பிரமாணம் செய்யப்பட்டார்.

<u>முதல் விசாரணை</u>

என் தரப்பு எழுத்து பூர்வ முதல் விசாரணை சாட்சிய வாக்குமூலத்தை கடந்த 18.11.2024 ம் தேதியில் இந்நீதிமன்றத்தில் தாக்கல் செய்தேன். தற்போது என் தரப்பில் எனது தரப்பு வாதத்தை நிருபிக்கும் பொருட்டு **வா.சா.ஆ.1 முதல் வா.சா.ஆ.7 (Ex.A.1 to Ex.A.7)** வரையிலான ஆவணங்களை என் பிரமாண வாக்குமூலத்தில் குறிப்பிட்டுள்ளபடி குறியீடு செய்கிறேன்.

**<u>8 ம் பிரதிவாதி தரப்பில் வா.சா.1 ஐ குறுக்குவிசாரணை:—</u>**

1) எதற்காக இவ்வழக்கை நான் தாக்கல் செய்துள்ளேன் என்றால், என் பூர்வீக சொத்து என் தாயும், தந்தையும் மேற்படி சொத்து குறித்து எவ்வித ஏற்பாடும் செய்யாமல் இறந்துவிட்டனர். அதனால், வாரிசுரிமைப்படி என் சகோதர, சகோதரிகளுக்கு எதிராக நான் சொத்தில் பாகம் கேட்டு இவ்வழக்கை தாக்கல் செய்துள்ளேன். என் தந்தை பெயர் என்னவென்றால், முத்துக்கவுண்டர் ஆகும். முத்துக்கவுண்டருக்கு இரண்டு மனைவிகள் என்றால், சரிதான். முதல் மனைவிக்கு எத்தனை வாரிசுதாரர்கள் என்றால், மூன்று நபர்கள் அவர்களது பெயர்கள் என்னவென்றால், 1.மாதேஷ், 2.தனம்மாள், 3.ஜெயம்மாள் ஆகும்.

2) என் தந்தை தன் முதல் மனைவி உயிருடன் இருந்த சமயத்தில் என் தாயாரை இரண்டாவதாக திருமணம் செய்து கொண்டார் என்றால், சரியல்ல. முதல் மனைவி

இறந்த பின்னிட்டுதான் திருமணம் செய்துகொண்டார். முதல் மனைவியின் வாரிசுதாரர்களிடம் சொத்தில் பாகம் கோரி இவ்வழக்கை நான் தாக்கல் செய்துள்ளேன் என்றால், சரிதான். 1ம் பிரதிவாதி மாதேஷ் என்பவர் என் உடன்பிறந்த சகோதரர் என்றால், சரிதான்.

3) தாவா சொத்து எந்த சர்வே எண்ணில் உள்ளது என்றால், ச.எண்.306ல் உள்ளது. தாவா சொத்தின் விஸ்தீரணம் என்னவென்றால், 0.16 சென்ட் ஆகும். மேற்படி 0.16 சென்ட் நிலத்தை சமமாக பிரித்து, எனக்கும், என் உடன் பிறந்த சகோதரர்களுக்கும் கொடுக்கவேண்டும் என தான் இவ்வழக்கை தாக்கல் செய்துள்ளேன் என்றால், சரிதான். மேற்படி 0.16 சென்ட் நிலம் தவிர எங்கள் குடும்பத்திற்கு பாத்தியப்பட்ட நிலம் எதுவும் இல்லை என்றால், சரியல்ல. என் பாட்டி பெயரில் சில நிலங்கள் உள்ளது. மேற்படி என் பாட்டி பெயரிலுள்ள நிலங்களை இவ்வழக்கில் சேர்த்துள்ளேனா என்றால், சேர்த்துள்ளேன். மேற்படி நிலங்களின் சர்வே எண் என்னவென்றால், அது குறித்து எனக்கு நினைவில்லை.

(8ம் பிரதிவாதி தரப்பில் கேட்டுக்கொண்டதற்கிணங்க வா.சா.1 ஐ குறுக்குவிசாரணை தொடர்ச்சி வேறு ஒரு தேதிக்கு ஒத்திவைக்கப்படுகிறது.)

ஒம்/-திரு. R.மணிவர்மன்,
மாவட்ட உரிமையியல் நீதிபதி,
மேட்டூர்.